## செயல்முறையின் சாத்தியமான பக்க விளைவுகள் என்ன, அவற்றைப் பற்றி நான் என்ன செய்ய முடியும்?

1. லேசான வலி: இதை மருந்தகங்களில் கொடுக்கப்படும் வலி நிவாரண மருந்துகளால் நிர்வகிக்கலாம், எ.கா. பனடோல்.
2. இரத்தப்போக்கு: முதலில், அழுத்தம் கொடுக்கவும். அதிக இரத்தப்போக்கு தொடர்ந்தால், தயவுசெய்து **NUH மார்பக இமேஜிங் மையத்தில் (அலுவலக நேரங்களில் காலை 8.30 முதல் மாலை 5 மணி வரை) அல்லது NUH அவசரநிலை (அலுவலக நேரத்திற்குப் பிறகு) மருத்துவ கவனிப்பைப் பெறவும்.**
3. தொற்று: இது அரிதானது மற்றும் காய்ச்சல் அல்லது காயம் ஏற்பட்ட இடத்தில் சீழ்/சிவப்பு போன்றவை ஏற்படாலாம். இது நடந்தால், **NUH அவசரநிலையில் மருத்துவ உதவியை நாடுங்கள்.**
4. ஒவ்வாமை: பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கு (குளோரெக்சிடின், அயோடின் மற்றும் லிக்னோகைன்) ஏதேனும் **ஒவ்வாமை இருந்தால் உங்கள் மருத்துவரிடம் தெரிவிக்கவும்.**

## நான் இந்த நடைமுறையை தொடர வேண்டாம் என தேர்வு செய்தால் என்ன மாற்று வழிகள் உள்ளன?

1. மார்பக திசுக்களை அகற்றுவதற்கான அறுவை சிகிச்சை, இது அதிக ஆபத்துகள் உள்ளது  மற்றும் நீண்ட மீட்பு காலம் தேவைப்படும்.
2. குறுகிய காலத்தில் தொடர்ந்து இமேஜிங் செய்யலாம். இது குறைவான ஆக்கிரமிப்பு செயல்முறை ஆனால் இதை வைத்து  உறுதிப்படுத்த முடியாமல் போகலாம் அல்லது நோய் கண்டறிதலில் தாமதமும் ஏற்படலாம்.



**Our Patient Care Institutions**

National University Hospital
Ng Teng Fong General Hospital & Jurong Community Hospital
Alexandra Hospital
National University Polyclinics
Jurong Medical Centre
National University Cancer Institute, Singapore
National University Heart Centre, Singapore
National University Centre for Oral Health, Singapore
NUHS Diagnostics
NUHS Pharmacy

Scan the QR code for more information on our patient care institutions.

உங்களிடம் மேலும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து எங்களை தொடர்பு கொள்ள தயங்க வேண்டாம்:

**தேசிய பல்கலைக்கழக மருத்துவமனை**
**நோய் கண்டறிதல் இமேஜிங் துறை**
**தொலைபேசி: (65) 6772 2263**
**மின்னஞ்சல்: breastimaging_appt@nuhs.edu.sg**

Take charge of your health and access health information and services across NUHS institutions.
**Download the NUHS App now!**
Scan to download

The information in this brochure is meant for educational purposes and should not be used as a substitute for medical diagnosis or treatment. Please seek your doctor's advice before starting any treatment, or if you have any questions related to your health, physical fitness or medical condition.


© 2025, National University Hospital (Singapore) Pte. Ltd. All rights reserved. No part of this publication may be reproduced or shared without prior permission from National University Hospital (Singapore) Pte. Ltd.

Information is correct at time of printing (Mar 2025) and subject to revision without prior notice.

NUHS
National University Health System



# அல்ட்ராசவுண்ட் வழிகாட்டப்பட்ட மார்பக திசு ஆய்வு



## எனக்கு ஏன் மார்பக திசு ஆய்வு தேவைப்படுகிறது?


உடல் பரிசோதனையின் போது அல்லது முந்தைய ஸ்கேன் மூலம் மார்பகத்தில் அசாதாரண கண்டுப்பிடிப்பு கண்டறியப்பட்டால் மார்பக திசு ஆய்வு பரிந்துரைக்கப்படுகிறது. இது புற்றுநோயா என்பதை கண்டறிய எங்கள் மருத்துவர்கள் அவ்விடத்திலிருந்து மாதிரிகளைப் பெறுவார்கள்.

## செயல்முறைக்கு முன் நான் என்ன எதிர்பார்க்க முடியும்?

1. திசு ஆய்வு செயல்முறை, அதன் அபாயங்கள் மற்றும் சிக்கல்கள் ஆகியவற்றை உங்கள் மருத்துவர் உங்களுக்கு விளக்குவார். அப்போது உங்கள் ஒப்புதல் பெறப்படும்.
2. நீங்கள் நோயாளிகளுக்கான உடைக்கு மாறியதும், நோயாளி படுக்கைக்கு வழிகாட்டப்படுவீர்கள். செயல்முறை சுமார் 45 நிமிடங்கள் நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
3. திசு ஆய்வுக்கு உண்ணாவிரதம் தேவையில்லை. **நீங்கள் இரத்தத்தை மெலிக்கும் மருந்துகளை எடுத்துக் கொண்டால், தயவுசெய்து உங்கள் மருத்துவரிடம் தெரிவிக்கவும்.**









## செயல்முறையின் போது நான் என்ன எதிர்பார்க்க முடியும்?

1. உங்கள் மார்பகத்தின் செயல்முறை தளம் மீது ஒரு கிருமி நாசினிகள் திரவம் (குளோரெக்சிடின் அல்லது அயோடின்) மூலம் சுத்தம் செய்யப்படும். தோலை மரத்துப் போகச் செய்ய அவ்விடத்தில் மயக்க மருந்து (லிக்னோகைன்) செலுத்தப்படும். செயல்முறையின் போது நீங்கள் விழித்திருப்பீர்கள் என்பதை நினைவில் கொள்க.
2. திசு ஆய்வு ஊசி நுழைய ஒரு சிறிய கீறல் செய்யப்படும். இது தோராயமாக 1 cm இருக்கலாம். பல இடங்களில் திசு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றால், தோலில் பல கீறல்கள் செய்யப்படலாம்.



3. திசு ஆய்வின் போது மாதிரிகள் சேகரிக்கப்படும்போது உரத்த சொடுக்கும் ஒலிகளைக் கேட்கலாம். **நீங்கள் அசையாமல் இருப்பது முக்கியம்.** ஒரு மார்பக கட்டிக்கு ஒரு அல்லது சில மாதிரிகள், மருத்துவர் எடுப்பார்.





4. அல்ட்ராசவுண்ட் வழிகாட்டப்பட்ட மார்பக திசு ஆய்வுக்கு உட்படும் சில நோயாளிகளுக்கு, ஒரு சிறிய உலோக கிளிப் ("அடையாள கிளிப்") மார்பகத்தில் வைக்கப்படலாம். இந்த கிளிப் பல்வேறு ஸ்கேன்களில் திசு ஆய்வுசெய்யப்பட்ட பகுதியை மருத்துவர் கண்டறிய உதவுகிறது மற்றும் அறுவை சிகிச்சை செய்ய சரியான பகுதிக்கு அறுவை சிகிச்சை நிபுணரை வழிநடத்துகிறது. **எம்ஆர்ஐ ஸ்கேன் மற்றும் விமான நிலையத்தில் உள்ள மெட்டல் டிடெக்டர்களுக்கு இது பாதுகாப்பானது. கிளிப் நிரந்தரமானது, அதை உங்களால் கவனிக்கவோ உணரவோ முடியாது.**
5. ஒரு மேமோகிராம் வழக்கமாக அதன் நிலையை உறுதிப்படுத்த அடையாள கிளிப் செருகப்பட்ட பிறகு செய்யப்படுகிறது. அடையாள கிளிப் செருகப்படாவிட்டால், இந்த மேமோகிராம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

## செயல்முறைக்குப் பிறகு நான் என்ன எதிர்பார்க்க முடியும்?

1. சிறிய இரத்தப்போக்கு எதிர்பார்க்கப்படுகிறது. ஏதேனும் வலி அல்லது அசௌகரியம் சில மணிநேரங்களில் குறைய வேண்டும்.
2. திசு ஆய்வு முடிவுகள் மற்றும் சிகிச்சை விருப்பங்கள் உங்கள் அடுத்த சந்திப்பில் உங்களுடன் கலந்துரையாடப்படும். திசு ஆய்வின் முடிவுகள் புற்றுநோயாக இல்லாவிட்டாலும் சில சமயங்களில் அறுவை சிகிச்சை மூலம் அகற்றுவது பரிந்துரைக்கப்படலாம் என்பதை நினைவில் கொள்ளவும்.

